## தேயிலை ஆராய்ச்சி சபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேயிலை ஆரய்ச்சி சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)

2012 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் புதிய கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்) பிரயோகிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக சபை பின்வரும் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றியிருக்கவில்லை.

(அ) தற்போது பாவிக்கப்பட்டு வருகின்ற நிலையான சொத்துக்களின் பெறுமதி எல்கேஏஎஸ் 16 இன் பிரகாரம் மீள விலைமதிக்கப்பட்டு சந்தைப் பெறுமதியில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்நியமத்தின் படி காணியும் கட்டிடங்களும் தனித்தனியான சொத்துக்களாவதுடன் அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், சபை காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை ஒன்றாகச்சேர்த்து கணக்குகளில் காண்பித்திருந்தது.

விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மீள விலைமதித்தல் செயன்முறையை பொறுப்பேற்று அது முடிவடையும் தறுவாயில் உள்ளதாக சபையின் தலைவர் அவரது பதிலில் குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) எல்கேஏஎஸ் 19 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் முடிவிலுள்ளவாறு பணிக்கொடை ஏற்பாடு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலான நிகழத்தக்க பொறுப்புக்கள் எல்கேஏஎஸ் 37 இன் பிரகாரம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய பெறுமானத்தேய்வு வீதம் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வுக் கொள்கை மாற்றப்பட்டதாக குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் எவ்வித மாற்றங்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகளிற்காக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு சபையால் செலுத்தப்பட்ட ரூபா 193,014 தொகையான அங்கத்துவக் கட்டணத்தினை இலாபத்திற்குச் சாட்டுதல் செய்யப்படாமல் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மெய்மையாய்வுத் தாள்களின் படி, வலஹன்துவ ஆய்வுகூடம் மற்றும் தெனியாய விரிவாக்கல் நிலையத்தில் காணப்பட்ட ரூபா 121,128 தொகையான வழிக் காசுகள் நிதிக்கூற்றுக்களில் தனியாகக் காண்பிக்கப்படாமல் காசின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 100,265 தொகை பணிக்கொடையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவருக்காக மீளாய்வாண்டில் மீண்டும் அதற்குச் சமமான தொகை பணிக்கொடையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) தொடர்ந்தியங்கிக் கொண்டிருக்கின்ற செயற்திட்டங்களிற்காக கிடைத்திருந்த ரூபா 3.34 மில்லியன் தொகையான மானியங்கள் கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.4 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஏற்பாட்டு பட்டோலைகளின் படி, ரூபா 13,449,924 ஆக காணப்பட்ட போதிலும், இலாபத்திற்கெதிராக ரூபா 12,365,666 தொகை மாத்திரம் சாட்டப்பட்டிருந்தது. ஆகையால் கணக்காய்வில் ரூபா 1,084,258 வேறுபாடு கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 1.2.5 கணக்குகளில் அதிகரித்துக் காட்டல்கள் மற்றும் குறைத்துக் காட்டல்கள்

(அ) மீளாய்வாண்டின் 90 நாட்கள் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிலையான வைப்புக்கள் மீது பெறப்பட்ட வட்டி வருமானம் மற்றும் பெறப்பட வேண்டிய வட்டி வருமானம் என்பன ரூபா 155,413 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) தேசிய விஞ்ஞான மன்றத்தினால் மீளாய்வாண்டில் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான தன்னியக்க காலநிலை முறைமை கணக்குகளில் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதே செயற்திட்டத்திற்காக சபையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 315,728 தொகை கணக்குகளில் மூலதனமாக்கப்படாது இலாபத்திற்கெதிராக சாட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக சொத்துக்கள் கணக்கு ரூபா 1,315,728 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மானியக் கணக்கு ரூபா ஒரு மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ''மெதில் புரோமைட்'' (Methyl Bromide) செயற்திட்டத்தின் கீழ் ரூபா 578,372 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 கணனிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சொத்துக்கள் கணக்கு மற்றும் மானியக் கணக்கு என்பன அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகம் மற்றும் சென்ற் கூம்ப்ஸ் தொழிற்சாலையின் முறையே ரூபா 885,969 மற்றும் ரூபா 725,067 தொயையான வியாபார மற்றும் சில்லறைக் கடன்பட்டோர் அறவிடப்படாது 04 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தன.

(ஆ) ரூபா 97,371 தொகையான சில்லறைக் கடன்பட்டோர் ஆரம்ப மீதிகள் தொடர்பில் மீளாய்வாண்டில் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றிருந்த போதிலும், அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.
இது சபையின் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்புபட்ட தொகையாக காணப்படுவதுடன் சகல மீதிகளையும் அறவிடுவதற்கு 2013 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என சபையின் தலைவரால் அவரது பதிலளிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) பின்வரும் வைப்புக்களை அறவிடுவதற்கு/தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

- (i) 1998 இற்கு முன்னர் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 51,575 தொகையான எரிபொருள் வைப்புக்கள்
- (ii) 2010 மற்றும் 2011 இல் பெறப்பட்ட ரூபா 38,400 தொகையான மீளளிக்கப்படத்தக்க வைப்புக்கள்
- (iii) ரூபா 61,440 தொகையான பிடிகாசு

### 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | நிலையான படிகள் மீது ஊ.சே.நி உதவு தொகைகள் ஊழியர்களிடமிருந்து கழிக்கப்பட் டிருக்காததுடன் அந்தப் படிகள் மீதான வேலை கொள்வோனின் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி உதவு தொகைகள் முன்னைய ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் மே 30 வரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் | |
| - இல. 177(1) | 2012 சனவரி முதல் மே வரையான ரூபா |

| | | |
|---|---|---|
| | | 184,952 தொகையான நாளாந்த சேகரிப்புகள் நாளாந்தம் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப சாத்தியமான நேரகாலத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்படாது பஸ்ஸரை நிலையத்தினால் செலவிடப்பட்டிருந்தது. |
| | - இல. 371(2) (இ) | (i) ரூபா 1,511,719 தொகையான முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கம் முடிவுற்றவுடன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உடனடியாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) சென்ற் கூம்ப்ஸ் தொழிற்சாலையின் ரூபா 15,267 தொகையான காசு முற்பணங்கள் 05 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப் பட்டிருக்கவில்லை. |
| | - இல. 570 | வெளித்தரப்பிடம் வைப்புச்செய்யப்பட்ட ரூபா 43,600 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் பந்தி 6.5.1 | 2012 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 12 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | நிலையான சொத்துப்பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் சபைக்கு சொந்தமான காணிகள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் மோட்டார் வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, முன்னயை ஆண்டிற்கான ரூபா. 26.8 மில்லியன் நேரொத்த தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா. 28.7 மில்லியன் தேறிய பற்றாக்குறையை விளைத்திருந்தமையால் நிதிவிளைவுகளில் மேலும் ரூபா 1.9 மில்லியன் பின்னடைவு காட்டப்பட்டது. செயற்பாட்டுச் செலவினம் அதிகரித்திருந்தமையே இதற்குப் பிரதான காரணமாகும்.

### 2.2 தோட்டங்களின் செயற்பாட்டு விளைவுகள்

சென்ற் கூம்ஸ் தோட்டம் மற்றும் சென்ற் யோகிம் தோட்டம் என்ற பெயர்களுடைய இரண்டு தோட்டங்களை சபை முகாமை செய்திருந்ததுடன் இந்தத் தோட்டங்களின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்படுகின்றன.

| | சென்ற் கூம்ஸ் தோட்டம் (லமிலியர் பிரிவு உட்பட) | | செனற் யோக்கிம் தோட்டம் | |
|---|---|---|---|---|
| **தேயிலை விற்பனைகள்** | **2012** | **2011** | **2012** | **2011** |
| அளவு (கிலோ கிறாம்கள்) | 376,412 | 344,131 | 283,065 | 396,287 |
| விற்பனைப் பெறுமதி (ரூபா'000) | 173,875 | 141,490 | 111,773 | 144,697 |
| ஏனைய வருமானம் (ரூபா'000) | 2,356 | 1,643 | 15,524 | 8,005 |
| மொத்த வருமானம் (ரூபா'000) | 176,231 | 143,133 | 127,297 | 152,702 |
| கழி: | | | | |
| மொத்த செலவினம் (ரூபா'000) | 153,263 | 140,942 | 135,021 | 168,726 |
| செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)(ரூபா'000) | 22,968 | 2,189 | (7,724) | (16,024) |
| முன்னைய ஆண்டு சீராக்கங்கள் (ரூபா'000) | (335) | (15,112) | (1,141) | (1,526) |
| தேறிய இலாபம் (நட்டம்) ரூபா'000 | 22,633 | (12,923) | (8,865) | (17,550) |
| ஒரு கிலோ கிராம் தேயிலைக்கான உற்பத்திக் கிரயம் (ரூபா) | 411.49 | 413.43 | 405.25 | 394.24 |
| ஒரு கெக்டெயருக்கான விளைச்சல் (கிலோ கிராம்) | 2,293 | 2,444 | 774 | 1,002 |
| தேறிய விற்பனைச் சராசரி (ரூபா ஒரு கிலோ கிராமிற்கு) | 455.29 | 405.78 | 388.37 | 359.31 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

---

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சென்ற் கூம்ஸ் தோட்டத்தின் விற்பனை அளவு 32,581 கிலோகிராம்களால் அதிகரித்திருந்ததுடன் செயற்பாட்டு இலாபமும் ரூபா 20.78 மில்லியனால் அதிகரித்திருந்தது. விற்பனை ரூபா 32.38 மில்லியனால் அதிகரித்தும் பொது அறவீடுகள் ரூபா 11.73 மில்லியனால் குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சென்ற் யோக்கிம், தோட்டத்தின் விற்பனை அளவு 113,222 கிலோகிராம்களால் குறைவடைந்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு நட்டம் ரூபா 8.3 மில்லியனால் குறைவடைந்திருந்தது.
தொழிற்சாலைக் கணக்குகளின் படி, மீளாய்வாண்டில் தேயிலைத் தோட்டங்களிலிருந்து ரூபா 7.25 மில்லியன் மற்றும் தேயிலைச் தொழிற்சாலை களிலிருந்து ரூபா 3.96 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், இறப்பர் தோட்டங்களிலிருந்து ரூபா 2.1 மில்லியன் இலாபமொன்று உழைக்கப்பட்டிருந்த போதிலும் தோட்டங்களிற்குச் சொந்தமான நெற் காணிகளிலிருந்து எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, சென்ற் கூம்ஸ் மற்றும் சென்ற் யோகிம் தொழிற்சாலைகளின் நாளொன்றிற்கான பச்சை இழை இயந்திர இயலளவுகள் முறையே 10,000 கி.கி. மற்றும் 15,000 கி.கி ஆகக் காணப்பட்டன. இருப்பினும், அந்த இயந்திரங்களின் உள்ளபடியான சாராசரிப் பயன்படுத்தல் நாளொன்றிற்கு முறையே 6,250 கி.கி (62.5 சதவீதம்) மற்றும் 3,500 கி.கி (23.33 சதவீதம்) ஆகக் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

(அ) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டின் முடிவிலுள்ளவாறு சபையின் நிதிச் செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சித்திட்டம் | ஆண்டிற்கான ஒதுக்கீடு | | | பயன்பாடு | | | சதவீதமாக பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|
| | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | % |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | |
| பயிர் முன்னேற்றம் | 13.49 | 10.57 | 24.06 | 11.75 | 06.91 | 18.66 | 78 |
| காணி உற்பத்தி திறன் விருத்தி | 16.99 | 10.72 | 27.71 | 21.58 | 04.42 | 26.00 | 94 |
| காலநிலை மாற்ற தாக்க மதிப்பீடு | 01.66 | 01.84 | 3.50 | 01.84 | 0.09 | 1.93 | 55 |
| களப் பயிற்சி இயந்திரமுறை | 01.63 | 0.09 | 1.72 | 1.80 | - | 1.8 | 105 |
| பயிர் முகாமைத்துவம் | 09.39 | 07.23 | 16.62 | 10.74 | 02.27 | 13.01 | 78 |
| தேயிலை உலர்த்தலிற்கான மாற்றுச் சக்தி மூலங்கள் | 01.23 | 0.04 | 1.27 | 01.40 | 0.02 | 1.42 | 112 |
| தேயிலை செயன்முறை தொழில்நுட்பம் | 08.06 | 04.45 | 12.51 | 08.03 | 02.36 | 10.39 | 83 |
| தயாரிக்கப்பட்ட தேயிலைத் தரம் | 01.56 | 0.87 | 2.43 | 01.37 | 0.12 | 1.49 | 61 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை உற்பத்திப் பொருட்கள் | 04.05 | 04.20 | 8.25 | 07.96 | 02.19 | 7.15 | 87 |
| வளத் திட்டமிடல் | 05.11 | 0.75 | 5.86 | 03.19 | 0.14 | 3.33 | 57 |
| ஆர்வமுடையவர்களிற்கான சேவைகள் | 23.82 | 04.70 | 28.52 | 20.04 | 02.12 | 22.16 | 78 |
| உள்ளக சேவைகள் மற்றும் பராமரிப்பு | 169.60 | 34.95 | 204.55 | 165.40 | 19.75 | 185.15 | 91 |
| ஆராய்ச்சி முகாமைத்துவம் | 14.02 | 10.60 | 24.62 | 13.73 | 04.98 | 18.71 | 76 |
| **மொத்தம்** | **270.61** | **91.01** | **361.62** | **265.83** | **45.37** | **311.20** | **86** |

(ஆ) தொழிற்சாலைகளின் நடவடிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் சபையின் தொழிற்சாலைகள்

மற்றும் தோட்டங்களின் நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தை கணக்காய்வில் மதிப்பிட முடியவில்லை.

(இ) திட்மிடப்பட்டவாறு மீளாய்வாண்டில் பின்வரும் விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

| | ரூபா |
|---|---|
| ஒஸ்மோ மானி | 800,000 |
| "பியூம் ஹுட்" | 500,000 |
| தீ புகைப்பட மானி | 1,500,000 |
| | -------------- |
| | 2,800,000 |
| | ======= |

திறைசேரியால் மூலதன நிதிகள் குறைக்கப்பட்டமையால் இவ்விடயங்களை கொள்வனவு செய்ய முடியாதிருந்ததாக சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(ஈ) கொள்வனவுத் திட்டத்தின் படி, கந்தான-மீள் நடுகைக்காக ரூபா 1,200,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், மீளாய்வாண்டில் இந்நடவடிக்கை நடாத்தப்பட்டிருக்கவில்லை.
2012 ஆம் ஆண்டில் ரூபா 180,000 ஆரம்பக் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டதாகவும் மிகுதிக் கொடுப்பனவு 2013 இன் பாதீட்டுக்கு மாற்றப்பட்டதாகவும் சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தரப்பட்ட தகவல்களின் படி, முழுச் சம்பளத்துடன் கற்கை விடுமுறைகளைப் பெற்றிருந்த கட்டாய சேவைக்காலத்தில் சேவையாற்றத் தவறிய 10 அலுவலர்களிடமிருந்து ரூபா 27,090,600 ஆன தொகை அறவிடப் பட்டிருக்கவில்லை. மேலும், நீண்டகாலமாக உத்தியோகத்தர்கள் சேவையில் இன்மையால் இத்தொகையை அறிவிடுதல் ஐயத்திற்குரியதாக உள்ளது.

(ஆ) 1982 இலிருந்து லோவறி தேயிலை செயன்முறை செயற்திட்டமாக கணக்குகளில் நடைபெறும் வேலைகளின் கீழ் ரூபா 4,142,173 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. தரப்பட்ட தகவல்களின்படி, இலங்கைத் தேயிலை செயன்முறைக்குப் பொருந்தக் கூடியதா என்று பரிசோதிப்பதற்காக ஆறு இயந்திரங்கள் மலைநாட்டில் ஆறு தொழிற்சாலைகளில்

பொருத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அந்த இயந்திரங்கள் இலங்கை தேயிலை செயல்முறைக்கு பொருத்தமுடையதல்ல என்று செயற்திட்டம் கைவிடப்பட்டது. எனினும், அந்த இயந்திரங்கள் நிறுவப்பட்ட அத் தொழிற்சாலைகளிலேயே இதுவரை பயன்பாடின்றி உள்ளதுடன் நீண்ட காலமாக கணக்குகளில் நடைபெறும் வேலைகளாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சென்ற யோக்கிம் தோட்டத்திலுள்ள 143.810 கெக்டெயர் பரப்பளவான மொத்த காணியில் 17.675 டெக்டெயர்கள் நீண்டகாலமாக வெளியார் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தரமான வீடுகளை நிர்மாணித்து நெல், தேயிலை, றப்பர், தென்னை மற்றும் ஏனைய பயிர்களையும் பயிர் செய்திருந்தனர். ஆகையால் அந்த பயிர் செய்கையிலிருந்தான வருமானத்தை தோட்டம் இழந்திருந்ததுடன் காணிகளை வெற்றிடமாக்குவதற்காக அந்த மக்களிற்கெதிராக 2013 மார்ச் 31 வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 இல் சபையால் நியமிக்கப்பட்ட குழுவின் தீர்மானத்தின் படி, புத்தகங்களில் 2005 முதல் காண்பிக்கப்பட்டு வருகின்ற ரூபா 302,893 பெறுமதியான விஞ்ஞான இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆபத்தான இரசாயணங்கள் இவ்விருப்பில் உள்ளடங்கியுள்ளமையால் இதனை அழிக்கவோ அகற்றவோ முடியாதுள்ளமையால் இவ்விடயம் தொடர்பில் உதவி பெறுவதற்காக ஐரீஜ இற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(உ) சென்ற் யோக்கிம் தோட்டத்தில் சேவையாற்றுகின்ற இரண்டு ஊழியர்களின் பதவியுயர்வு தொடர்பாக சபைக்கு எதிராக இரத்தினபுரியில் உள்ள தேசிய தோட்ட சேவையாளர் சங்கத்தால் 2008 இல் ஒரு நீதிமன்ற வழக்கு தொடர்பட்டிருந்தது. சபையானது இணக்கப்பாட்டிற்கு வராது வழக்கை முன்னெடுத்துச் சென்றதுடன் மீளாய்வாண்டினிறுதிவரை தனியார் சட்டத்தரணிகளிற்கு ரூபா 902,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த வழக்கு 2013 பெப்ரவரியில் சபையால் வாபஸ்பெறப்பட்டிருந்ததுடன் முறைப்பாடு செய்திருந்த ஊழியர்களிற்கு சம்பள உயர்வுகளை வழங்குவதற்கு இணங்கியிருந்தது.

(ஊ) பின்வரும் வதிவிட விடுதிகள் கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 15 ஆந் திகதியில் உள்ளவாறு பயன்படத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| வகை | பயன்படுத்தப்படாதிருந்த விடுதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஏ | 01 |
| பீ | 03 |
| சீ | 03 |
| டீ | 22 |
| | 29 |

(எ) சபையின் லெமிலியர் தோட்டத்திற்குச் சொந்தமான காணி மற்றும் தொழிற்சாலை 2003 யூலை 16 ஆந் திகதியன்று ரூபா 600,000 வருடாந்த வாடகைக்கு 50 ஆண்டு காலத்திற்காக தனியார் தரப்பிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதுடன் குத்தகை உடன்படிக்கையின் படி ஒவ்வோர் 05 ஆண்டுகளிற்கும் ஒரு முறை அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் கீழ் குத்தகை வாடகை திருத்தப்படும். இருப்பினும் குத்தகை வாடகையினை திருத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
வாடகையினைச் செலுத்தாமை தொடர்பில் நீதிமன்ற வழக்கு காணப்படுவதுடன் வாடகையினைத் திருத்துவதற்குப் பதிலாக தற்போதைய நிலையை சமாளிக்கவேண்டியுள்ளது என சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(ஏ) வலகன்துவ விரிவாக்கல் நிலையத்திற்குச் செலுத்தப்பட்ட காசுக் கட்டுநிதி ரூபா 50,000 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுக் கட்டுநிதியின் மிகுதி ரூபா 73,059 ஆக இருந்தது. ஆகையால், எவ்வித அங்கீகாரமுமின்றி கட்டுநிதி ரூபா 23,059 ஆல் மிகைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் மண் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக மெதில் புரோமைட் (Methyl Bromide) செயற்திட்டத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதிகள் முறையே ரூபா 1,692,750 மற்றும் 6,950,302 ஆகக் காணப்பட்டன. 2010 மார்ச் 10 ஆந் திகதியன்று சேவை ஒப்பந்தக் காலம் முடிவுற்று 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,992,170 மீதியாகக் காணப்பட்ட போதிலும்,

செயற்திட்ட நடவடிக்கைகள் அடையப்பட்டமைக்கான எவ்வித சான்றுகளும் கிடைக்கப் பெறவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 ஓகத்து 24 ஆம் திகதிய கடிதத்தின்படி சபையின் அனுமதிக்கப்பட்ட புதிய ஆளணி 443 ஆனதுடன் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் பதவியணி நிலைமை கீழே தரப்படுகின்றது.

| பதவி அணி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 43 | 13 | 30 | - |
| இரண்டாம் மட்டம் | 120 | 76 | 51 | 07 |
| மூன்றாம் மட்டம் | 130 | 56 | 74 | - |
| ஆரம்ப மட்டம் | 150 | 78 | 72 | - |
| மொத்தம் | 443 | 223 | 227 | 07 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் படி, 30 சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் அடங்கலாக 227 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபையால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மோட்டார் வாகனங்களின் பாவனை

கார்கள், பேருந்துகள், வான்கள், ஜீப்கள், முற்சக்கர வண்டிகள், லொறிகள், உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை உள்ளடக்கிய சபையின் வாகன அணி 117 ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு ஆண்டிற்கும் மேலாக பயன்பாடின்றி இருந்த எட்டு மோட்டார் வாகனங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓடக்கூடிய நிலையில் காணப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் வாகன அணியில் உள்ளடக்கப்படாது பயன்பாடின்றிக் காணப்பட்டது.

(இ) சபையின் ஒரு வாகனத்திற்கு ஒரு புதிய பொடியும் இயத்திரமும் பொருத்துவதற்காக ஒரு தனியார் கராஜிற்கு 2011 மே 30 ஆந் திகதி ரூபா

1,650,600 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் திருத்தத்திற்கான சபையின் அனுமதி மற்றும் என்ஜினை பதிலீடு செய்வதற்கான மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடமிருந்தான முன் அனுமதி என்பன பெறப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. செய்யப்பட்ட திருத்தங்களின் பின் 2012 சனவரி 19 முதல் 2013 மார்ச் 13 ஆந் திகதி வரை கணக்காய்வுத் திகதி வரை சபையின் வளவில் வாகனம் மீண்டும் பயன்பாடின்றிக் காணப்பட்டமையால் திருத்தம் திருப்திகரமான நிலையிருக்கவில்லை.

**3.5 பணிக்கொடை ஏற்பாடுகளின் முதலீடுகள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களில் (எல்கேஏஎஸ் 19) குறித்துரைக்கப்பட்டவாறு எதிர்காலப் பொறுப்பைச் சந்திப்பதற்காக சபையால் ரூபா 142,640,318 தொகையான பணிக்கொடை ஏற்பாடு முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நாளாந்த நடவடிக்கைகளிற்காக திறைசேரியினால் போதியளவு நிதிகள் விடுவிக்கப்படாமையால் இது சாத்தியமற்றதாக இருந்ததாகவும் நிதிகள் கிடைத்தவுடன் சரியான தொகையை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

**4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2008 – 2012 ஆம் காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயல்நடவடிக்கைத் திட்டமும் கொள்வனவுத் திட்டமும்**

செயல்நடவடிக்கைத் திட்டம் சபையின் பௌதீக இலக்குகளுக்காக அன்றி நிதிசார் இலக்குகளுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆகையால் பௌதீக இலக்குகள் அடையப்படுதலை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) முற்பணங்களின் தீர்ப்பனவு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கிடைக்க வேண்டியவைகளும் செலுத்தப்பட வேண்டியவைகளும்

(உ) தொழிற்சாலை முகாமைத்துவம்